DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No.436/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சத்தியமூர்த்தி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | குப்பாண்டி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.11.2025.

**முதல் விசாரணை**

1. நான் தேனி எரனிமுக்கால்பட்டிணத்தில் வசித்து வருகிறேன். தற்போது பழனி மாவட்டம் தமிழ்நாடு போக்குவரத்து கழகம் டிரைவராக பணி மனை .1 ல் வேலை செய்து வருகிறேன். கடந்த 16.08.2019 ம் தேதி இரவு 10.30 மணிக்கு TN 39 N 0348 என்ற அரசு பேருந்தை பழனி – கோவை தடம் வழியாக நானும் நடத்துனர் பாண்டியராஜன் என்பவரும் எடுத்து சென்றோம். அன்றைய தினம் 11.45 மணிக்கு பேருந்து அந்தியூர் பேருந்து நிலையம் அருகில் செக்போஸ்ட் அருகில் இடது புறமாக சென்று கொண்டிருந்த போது பொள்ளாச்சியிலிருந்து உடுமலை நோக்கி வந்த டெம்போ டிராவலர் வேகமாக வந்து எங்கள் அரசு பேருந்தின் முன் பகுதியில் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். அதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. நடத்துனருக்கு முகத்தில் காயம் ஏற்பட்டது. டெம்போ டிராவலரில் வந்த 10 பேருக்கு காயம் ஏற்பட்டது.
2. அரசு பேருந்தில் பயணம் செய்த 2–3 பேருக்கு சிறு சிறு காயம் ஏற்பட்டடது. எனக்கு வண்டிக்கும் சேதம் ஏற்பட்டது. டெம்போ டிராவலருக்கு சேதம் ஏற்பட்டது. நானும் நடத்துனரும் உடுமலை

அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். மற்ற நபர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார்கள் . டெம்போ டிராவலரின் வண்டி எண் KL 08 2776 ஆகும் விபத்திற்கு காரணம் டெம்போ டிராவலர் ஓட்டி வந்தவர் ஆவார். வண்டியை ஓட்டி வந்த சந்திரன் மகன் நிகில் குமார் என்று தெரிந்து கொண்டேன். மறுநாள் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

3. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் தெரியும். புகார் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது. விபத்திற்கு டெம்போ டிராவலர் டிரைவர் வேகமாகவும் கவனக்குறைவாகவும் வந்தது தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.